2014 ஜூலை 17]

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் இடத்தில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம், ELCOSEZ தொடங்குவதற்கு, குறைந்தபட்சம் 25 ஏக்கர் நிலமும், அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளுக்கு ரூபாய் முப்பது கோடியும் தேவைப்படுகின்றது. தகவல் தொழில்நுட்பத் துறையில் உலகளவில் ஏற்பட்டுள்ள மந்த நிலையின் காரணமாகத் தகவல் தொழில்நுட்பத் துறை நிறுவனங்கள், விரிவாக்கத்திற்குச் சுணக்கம் காட்டுகின்றன. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நிலத்தின் மதிப்பைப் பன்மடங்கு உயர்த்தியதனால், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் சுணக்கம் காட்டியதைத் தொடர்ந்து, ஒருசில நிறுவனங்களுடன் நிகழ்த்திய கலந்தாய்வில், இரண்டாம் நிலை நகரங்களில் நிர்ணயிக்கப்பட்ட நிலத்தின் விலை அதிகமாக உள்ளதாகவும் கருதப்பட்டது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை இயக்கும் வகையில், நிலத்தின் விலையை நிர்ணயம் செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கும் கொண்டுச் செல்லப்பட்டு ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 177, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

177—

புதிய வட்டம்

7498—திரு. இரா. தமிழ்ச்செல்வன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, குன்னம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து செட்டிக்குளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குன்னம் வட்டத்தினை இரண்டாகப் பிரித்து, செட்டிக்குளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய வட்டத்தை அமைத்தால், மேற்படி வட்டத்தில் கொளக்காநத்தம் மற்றும் செட்டிக்குளம் குறு வட்டங்கள் இடம்பெறும். இதில் கொளக்காநத்தம் குறுவட்டத்தில் இடம்பெறக்கூடிய சில கிராமங்கள் 35 கிலோ மீட்டருக்குமேல் தொலைவில் இருப்பதால், பொதுமக்கள் பெரம்பலூருக்கு வந்து, மீண்டும் வேறொரு பேருந்துமூலம் செட்டிக்குளத்தைச் சென்றடைய வேண்டியுள்ளது. எனவே, நிருவாக ரீதியாக செட்டிக்குளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க இயலாது. மேலும், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், இரூர் வருவாய்க் கிராமத்தில் செயல்பட்டு வருவதால், பொதுமக்கள் எளிதில் பயன்பெறும் வகையில் குன்னம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து செட்டிக்குளம் வட்டம் அமைக்க வழிவகை இல்லை. இருப்பினும் தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் 8–5–2012 அன்று பேரவை விதி 110–ன்கீழ் சட்டப் பேரவையில் அறிவித்துள்ள அறிவிப்பிற்கிணங்க, பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டத்தைப் பிரித்து, ஆலத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அரசாணை நிலை எண் 410, வருவாய்த் துறை, நாள் 21–11–2012–ன்படி தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் சூழ்நிலையில், பெரம்பலூர் தொகுதியில் குன்னம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, செட்டிக்குளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. இரா. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசைத் தேடி மக்கள் என்றிருந்த நிலையை மாற்றி, மக்களைத் தேடி அரசு என்கின்ற மகத்தான மக்கள் திட்டமான (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா திட்டத்தைக் கொண்டு வந்த அற்புதத் தலைவி! ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றே ஆண்டுகளில் மக்களின் வசதிக்காக 34 புதிய வருவாய் வட்டங்களைத்*

2014 ஜூலை 17]

தோற்றுவித்த வாழும் வரலாறே! வரலாற்றுப் பெட்டகமே! சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வறியவருக்கும், எளியவருக்கும் மாதம் ரூபாய் 1,000 அள்ளி வழங்கிய அட்சயப் பாத்திரமே! (மேசையைத் தட்டும் ஒலி) மாட்சிமைப் பொருந்திய தமிழ்த் திருநாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம், எங்கள் குடும்ப தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதம் வணங்குகிறேன். வினாத் தொடுத்து விடை அவைக்கு வருவதற்கு முன்பே, பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குன்னம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆலத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டத்தைத் தோற்றுவித்திருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 178, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

178—

நிலம் ஒப்படைத்தல்

***10722—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்திமலை அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயிலுக்கு 50 ஏக்கர் வன நிலத்தை ஒப்படைப்புச் செய்யும் பணியை விரைவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்திமலை, அருள்மிகு